★ யாழ் அரசாங்க அதிபருக்கு அத்தியாவசிய சேவை ஆணையாளர் தகவல்

## அரச ஊழியருக்கு இலவச நிவாரணம் இல்லை

அரச, கூட்டுத்தாபன, சபைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கான இலவச நிவாரண உணவுப் பொருட்கள் கிடைக்காது என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வட - கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச ஊழியர்களுக்கு இலவச உணவுப் பொருட்களை வழங்கலாம் என சுற்று நிருபம் ஒன்றை கடந்த மாதத்தில் சகல செயலகங்களுக்கும் அனுப்பிவைத்திருந்தது. ஆனால் இது சம்பந்தமாக அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் யாழ் அரச அதிபர் தொடர்பு கொண்டபோது அந்த சுற்று நிருபம் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதுடன் அமைச்சரவையினால் இதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரச ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இலவச நிவாரண உணவுப் பொருட்களை விநியோகித்தால் அதற்குரிய பணத்தை அறவிட வேண்டும் என அரச அதிபர் தெரிவித்தார். (66)

பக்கங்கள் நான்கு விலை ரூபா. 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 248 வெள்ளி 19-10-1990 (ஐப்பசி 02) ந. அவ்வல் 29

# வயாவிளானூடாக ராணுவம் குரும்பசிட்டிக்கு செல்ல முயற்சி

## இரண்டாவது நாளாக நேற்று விடுதலைப் புலிகள் எதிர்த்துத் தாக்குதல்

வயாவிளானிலிருந்தும், கட்டுவனிலிருந்தும் குரும்பசிட்டிப் பகுதிக்கு முன்னேற முயன்ற இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் சமர் இடம் பெற்றுவருகிறது.

பலாலி முகாமிலிருந்து கிழக்கில் வயாவிளானூடாகவும், மேற்கில் கட்டுவனூடாகவும் குரும்பசிட்டிப்பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடும் சமர் புரிந்துவருகின்றனர்.

நான்கு ஹெலிகப்டர்களும், மூன்று பொம்மர்களும், இரண்டு அவ்ரோ விமானங்களும் இதேசமயம் குண்டுகளை வீசின.

இராணுவத்தினர் வயாவிளான் சந்தியூடாக வயாவிளான் மகாவித்தியாலயத்தை அடைந்து தென்பகுதியாக குரும்பசிட்டி நோக்கி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஹெலிகப்டர் மீது தாக்குதல் புகைகக்கியபடி சென்றது

நேற்று மாலை 4.45மணியளவில் மயிலிட்டிப்பகுதியில் தாக்குதல்களில் ஈடுபட்ட ஹெலிகப்டர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை தொடுத்தனர்.

இதனால் அந்தக் ஹெலிகப்டர் சேதமடைந்து, அதன் வால் பகுதியில் புகை கக்கிய

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நேற்றைய தாக்குதல்களால் 50 க்கும் மேற்பட்டோர் காயம்

யாழ் குடாநாட்டில் நேற்று இரண்டாவது நாளாக ஸ்ரீலங்காப் படைகள் நடாத்திய விமானத் தாக்குதல்களால் 50 க்கும் மேற்பட்டோர் காயமடைந்து மானிப்பாய் போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர். குடாநாட்டின் ஏனைய ஆஸ்பத்திரிகளிலும் காயமடைந்த பலர் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வலிகாமம் வடக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர், (ப11ரு)

## திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் நேற்று பொம்மர் தாக்குதல்

நேற்றுக் காலை திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அங்கு நின்ற ஒருவர் காயமடைந்தார்.

கடந்த இரண்டு மாத காலத்தில் திருநெல்வேலிச் சந்தையில் இடம்பெற்ற ஐந்தாவது குண்டு வீச்சுத் தாக்குதல் இதுவாகும்.

ஏற்கனவே இடம்பெற்ற தாக்குதல்களினால் சந்தைப் பகுதியில் மட்டும் நால்வர் மரணமாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தாக்குதலினால்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மல்லாகத்தில் இருவர் பலி

மல்லாகம் 7ஆம் கட்டையில் நேற்றுக்காலை 9 மணியளவில் பொம்மர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது ச. விமலச்சந்திரன் (30), சு. சந்திராதேவி (15) ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர்.

சுமார் ஐந்து வீடுகள் சேதமடைந்துள்ளன. சு. பத்மாவதி (12), என்ற பெண் காயமடைந்துள்ளார். (ப-33)

## உரும்பராயில் பெண் பலி

நேற்று உரும்பராயில் இடம் பெற்ற விமானத்தாக்குதலால் இளம் பெண் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். பதினொரு பேர் வரை காயமடைந்தனர்.

உரும்பராய் - கோப்பாய் வீதியிலுள்ள வீடு ஒன்று பலத்த சேதமடைந்தது. இந்த வீட்டின் முன்புறம் இப்பெண் நின்றபோதே இந்த விபரீதம் நிகழ்ந்தது.

அருகில் உள்ள ஞானவைரவர் கோயிலும் சிறிது சேதமடைந்தது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## அங்கிளிக்கன் தேவாலயம் பலத்த சேதமடைந்தது

உரும்பராயில் நேற்றுக் காலை நடாத்தப்பட்ட பொம்மர் தாக்குதலால் அங்குள்ள பரிசுத்த இம்மானுவேல் அங்கிளிக்கன் தேவாலயம் பலத்த சேதமடைந்தது.

1987 இல் இந்திய இராணுவ நடவடிக்கையின் போது சேதமாகி பின்னர் 5 லட்சம் ரூபா செலவில் இத்தேவாலயம் திருத்தியமைக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்படவிருந்தது (ரு)

## காரைநகரில் ஷெல் தாக்குதல் வீடு சேதம், ஒருவர் காயம்

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று அதிகாலை ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

இதனால் கருங்காலியைச் சேர்ந்த கு. நவரத்தினம் என்பவரின் வீட்டின் பின்புறம் பலத்த சேதமடைந்தது.

த. தனேந்திரன் (6) என்ற சிறுவனுக்கு தொடையில் காயம் ஏற்பட்டது.

பகலில் வயல் பக்கம் நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிர

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் இடம் பெயர்வு

நேற்று முன்தினமும், நேற்றும் பலாலிப்பகுதியில் இடம் பெற்ற விமானத்தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்களை யடுத்து குப்பிளான், ஏழாலை, குரும்பசிட்டி, உருதங்குலை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

கோவில்களிலும், பாடசாலைகளிலும், உறவினர்கள் வீடுகளிலும் இவர்கள் தங்கியுள்ளனர். (ப-33-ரு)

## அச்சுவேலியிலும் நேற்று அவ்ரோ பீப்பா குண்டுவீச்சு

அச்சுவேலிப் பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் அவ்ரோ விமானம் நான்கு பீப்பாக்குண்டுகளை வீசியது.

இவற்றில் ஒன்று மகிழடி வைரவர் ஆலயத்திற்கு முன் ஒழுங்கையில் விழுந்து வெடிக்காத நிலையில் காணப்பட்டது.

மற்றையது தென் மூலை என்ற இடத்தில் அருளானந்தம் என்பவரின் வீட்டுமுற்றத்திலும் விழுந்து வெடிக்காது பீப்பா பிரிந்த நிலையில் உள்ளன.

இதன் உள்ளே சிகப்பு நிறக் களிபோன்ற ஒரு சேர்வை

—04 ஆம் பக்கம் பார்க்க

## முகாமின் பரப்பை அதிகரிக்கவே தற்போதைய நடவடிக்கையாம்

பலாலி முகாம் சுற்றாடலில் நடைபெற்ற மோதலில் இராணுவத்தினரில் ஐந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் நாற்பத்திமூன்று பேர் காயமடைந்ததாகவும் இதில் இருபது பேர் படுகாயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்தார்.

பலாலி முகாம் சுற்றாடலில் தற்போது இராணுவ

—04 ஆம் பக்கம் பார்க்க

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் குண்டு வீச்சினால் சேதம்

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் மீது நேற்றுப் பகல் 2.30 மணியளவில் விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் அங்கு நின்ற பக்தர்களில் பத்துப் பேர் வரை காயமடைந்தனர்.

நான்கு குண்டுகள் வீசப்பட்டபோதிலும் இரண்டு கோவிலின் மீது விழுந்ததால் ஆலய ஆதி மூலம் மணிக்கூட்டுக் கோபுரம் தவிர்ந்த

—04 ஆம் பக்கம் பார்க்க

## மீராவோடை தாக்குதல்

மீராவோடையில் விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றிவளைக்க முயன்ற ராணுவத்தினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார். (து)

## காயமடையும் சிப்பாய்களை அகற்ற விமானங்கள் மும்முரம்

பலாலிப்பகுதியில் கடந்த செவ்வாய் ராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து காயமடைந்த சிப்பாய்களைக் கொழும்புக்குக் கொண்டுவருவதற்கான விமான சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இரத்மலானை விமான நிலையமருகே அம்புலன்ஸ் வண்டிகள் அங்கும் இங்குமாக விரைவதைக் காணக்கூடிய

— 4 ஆம் பக்கம் பார்க்க

கந்த சஷ்டி சிந்தனை - 1

## முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கு!

முருகனைத் தமிழ்த் தெய்வம் என்று கொண்டாடுகிறோம். இது எவ்வாறு பொருந்தும்? அவன் சைவர்கள் தெய்வம் அல்லவா?

தமிழ்மொழி எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவானது. தமிழில் இலக்கண இலக்கியங்களைப் படைத்தவர் - அவர் எச் சமயத்தவராயினும் முருகனைப் பற்றிச் சொல்லாமல் விட்டதில்லை.

சங்கநூல்களைப் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்று தொகுத்துக் கூறுவதுண்டு. பத்துப்பாட்டு என்பது பத்து நெடும் பாட்டுக்களின் தொகுப்பு. அதில் முதலில் வருவது திருமுருகாற்றுப்படை. முருகனை அடையும் வழியைக் கூறுவது அது.

எட்டுத்தொகை நூல்களுள் முதல் தொகுக்கப் பெற்றது குறுந்தொகை என்பர். அதில் கடவுள் வாழ்த்தாக இருப்பது 'தாமரை புரையும் காமர் சேவடி' என்ற வரியுடைய செய்யுள். அது முருகனை வாழ்த்தும் பாட்டு. வீரசோழியம் என்ற இலக்கண நூலை இயற்றியவர் புத்தமித்திரர். அவர் பௌத்தர். அத்தகையவர் ஐந்திணைக்கும் உரிய தெய்வங்களைச் சொல்லும்போது முதல் திணைக்கும் முருகனையே தெய்வமாகக் குறிப்பிடுகிறார்.

சிறந்த அகப்பொருள் இலக்கண நூல் என்று போற்றப்படும் அகப்பொருள் விளக்கத்தை இயற்றியவர் நாற்கவிராசநம்பி. அவர் சமணர். அவரும் அகப்பொருளில் முருகனையே முதல் தெய்வமாக அமைத்துள்ளார்.

வீரமாமுனிவர் ஒரு கிறிஸ்தவ பாதிரியார். அவர் தொன்னூல் என்றோர் இலக்கண நூல் செய்தார். அந்நூலில், முனிவர் முருகனை முதற்பீடத்தில் ஏற்றியிருக்கிறார்.

இவ்வாறு சைவர்களும் பௌத்தர்களும் சமணர்களும் கிறிஸ்தவர்களும் முருகனுக்கு முதன்மை தரும்போது, அவனைத் தமிழ்த்தெய்வம் என்பதற்குத் தடையென்ன?

வவுனியா தடைமுகாமில் இராணுவத்தினால்

# செஞ்சிலுவைச் சங்கம் எடுத்துவந்த அத்தியாவசிய மருந்துகள் பறிமுதல்

கொழும்பிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்ட பல அத்தியாவசிய மருந்துகள் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் ஏழு லொறிகளில் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்களும், உணவுப் பொருட்களும் எடுத்துவரப்பட்டன.

இந்தப் பொருட்கள் யாவும் வவுனியாவில் வைத்து இராணுவத்தினால் முழுமையாக சோதனையிடப்பட்டன. அப்போது அப்பொதிகளில் இருந்த அத்தியாவசிய மருந்துகள் அனைத்தும் இராணுவத்தினால் பறிமுதல் செய்யப்பட்டன. அவசியமில்லாத மருந்துகள் மட்டுமே கிளிநொச்சிக்கு எடுத்துவர அனுமதிக்கப்பட்டன.

அத்துடன் இந்த லொறிகளில் கொண்டுவரப்பட்ட அரிசி, பருப்பு, சீனி மற்றும் பொருட்கள் இராணுவத்தினரால் சோதனை என்ற பெயரால் வேண்டுமென்றே கொட்டிச்சிந்தப்பட்டு, கலக்கப்பட்டு பாவனைக்கு உதவாதவாறு ஆக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (35கி)

## திறந்த பல்கலை மாணவர் கூட்டம்

இலங்கைத்திறந்தபல்கலைக் கழக யாழ் பிராந்திய நலன் புரிச்சங்க உறுப்பினர்களின் கலந்துரையாடல் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப்பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. சகல மாணவர் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (கி)

## மத்திய கல்லூரி முறைசாரா மாணவருக்கு

யாழ் மத்திய கல்லூரியில் முறைசாராக் கல்வித்திட்டத்தின்கீழ் 'குளிரூட்டலும், காற்றுச் சீராக்கலும்' பயிற்சியைக் கற்கும் மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமை தமது போதனாசிரியரை யாழ் கல்வித் திணைக்களத்தில் சந்தித்து வகுப்புக்களை ஆரம்பிப்பதுபற்றிக் கலந்தாலோசிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (70-கி)

## பிலிம் ரோல்களை எடுத்துச் செல்ல இராணுவம் வவுனியாவில் தடை

யாழ், கிளிநொச்சி பகுதிகளிலிருந்து கொழும்பு செல்லும் பயணிகள் கொண்டு செல்லும் புகைப்பட ரோல்கள் வவுனியா ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றது.

திருமண வீடுகளில் எடுக்கப்பட்ட பிலிம்ரோல் உட்பட சகல பிலிம்ரோல்களும் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்படுகின்றன.

யாழ் பகுதியில் விமானத் தாக்குதலின்போது நிர்மூலமாக்கப்பட்ட கட்டிடங்கள், பாடசாலைகள், ஆலயங்களின் புகைப்படங்கள் இங்கிருந்து வெளிநாடுகளிலுள்ள தொடர்பு சாதனங்களுக்கும், மனித உரிமை ஸ்தாபனங்களுக்கும் அனுப்பப்படலாமென்பதனாலேயே இத்தடை அமுல் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-6கி)

கிளிநொச்சி மாவட்டத்தில்

## இரண்டாம் தர அதிபர்களாக பதவியுயர்வு பெற்றோர் விபரம்

கடந்தவருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெற்ற இலங்கைப்பாடசாலைஅதிபர் சேவை தரம் இரண்டு பதவியுயர்வுப் பரீட்சையில் சித்தியடைந்தகிளிநொச்சிமாவட்ட ஆசிரியர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிபர் சேவை தரம் இரண்டிற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்களின் விபரம் வருமாறு: திருமதி பி. மார்க்கண்டு (சென். திரேசா மகளிர் பாடசாலை), எம். சண்முகராஜா (உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), திருமதி. ஈ. எஸ். ஜெயநேசன் (சென். திரேசா மகளிர் பாடசாலை) திரு. வி. மாணிக்கம் (பளை றோமன் கத்தோலிக்க பாடசாலை).

ரி. கணபதிப்பிள்ளை (வேரவில் இந்து மகாவித்தியாலயம்) என். சோதிநாதன் (கிளிநொச்சி மத்தி மகாவித்தியாலயம்)எஸ்.கே.சிதம்பரப்பிள்ளை (பளை மகாவித்தியாலயம்)கே.சின்னராஜா(அக்கராயன் மூலாதாரப் பாடசாலை). (ப-6கி)

## யாழ் மத்திய கல்லூரி பலத்தசேதம்

மும்முனைத் தாக்குதலினால் யாழ் மத்திய கல்லூரியின் புதிய மூன்று மாடிக் கட்டிடம், விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம், ஸ்மித் பிளொக், காஸ் பிளொக், தம்பர் நினைவுக் கட்டிடம், 150 வருட நினைவுக் கட்டிடம், ஆரம்பப் பிரிவு பாடசாலை. புதிய காரியாலய அறை, ஆசிரியர்கள் கூடும் மண்டபம், பழைய விடுதி மண்டபம் என்பவை பாரிய சேதத்துக்குள்ளாகிக் காணப்படுகின்றன.

உயர்தர மாணவர்களுக்காக அண்மையில் கட்டப்பட்ட மூன்று மாடிக் கட்டிடம் பாரிய சேதமுற்றுள்ளது தளபாடங்களும் உடைந்துள்ளன. புதிய விஞ்ஞான ஆய்வு கூடத்தின் மேற்கூரைச் சுவர்கள் என்பனவும் சேதமுற்றுள்ளன. அருகில் உள்ள புதிய மலசல கூடஅறைகள் முற்றாகத்தரையுடன் பெயர்ந்துள்ளன. இவை மாபிள் கொண்டு அண்மையில் கட்டப்பட்டதாகும்.

இதன் அருகில் உள்ள பழைய இரண்டு மாடிக் கட்டிடத்தின் வடக்கு மூலையில் நூலகர்இருக்கும்இடம் பொம்மர் தாக்குதலினால் கீழே விழுந்தநிலையில்காணப்படுகிறது. இங்கிருந்த பல பெறுமதிமிக்க புத்தகங்களும் முற்றாக சேதமுற்றுள்ளன. மத்திய கல்லூரியின் எஞ்சிய கட்டிடங்களும் பலத்த சேதமுற்றுள்ளன. (ப-17 கி)

## பகவான் சாயிபாபா பொன்விழா; 20-ம் திகதி உலகம் பூராக நடைபெறும்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்களின் 50 ஆண்டு அவதாரப்பணியை முன்னிட்டு 20-ம் திகதி உலகம் பூராவும் பொன்விழா எடுக்கப்படுகிறது.

அவர் தமக்கு 13 வயதாக இருக்கையில் அதாவது 20-10-1940-ல் அவதாரப் பணியை ஆரம்பித்தார். இன்று 20-10-1990-ல் 50 ஆண்டுப்பணி நிறைவுறுவதால் சுமார் 100 நாடுகளில் இவ்விழா எடுக்கப்படுகிறது.

தமிழீழப் பிரதேசத்தில் இவ் விழாவினைக் கொண்டாடுவதற்கு உரிய சூழ்நிலை இல்லாதபோதும், சாயிஅடியார்கள் இவ்விழாவையொட்டி வழிபாட்டுத் தலங்களில் பூசை, பஜனை, தொண்டு போன்றவற்றை மேற்கொண்டுள்ளார்கள்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்களின் ஐம்பது வருட அவதாரப் பணியைமுன்னிட்ட பொன்விழா பஜனை 20-ம் திகதி அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவிருக்கிறது. பி.ப.3மணிதொடக்கம் 6மணிவரை இந்தப் பொன்விழா நிகழ்ச்சி நடைபெறும்.(17-கி)

### பன்றியால் பாதிப்பு

மட்டுவில் வடக்கில் உள்ள மரவெள்ளித் தோட்டங்களில் கட்டாக் காலியாகத் திரியும் பன்றி, மரவெள்ளிக்கிழங்குகளை அபேஸ் செய்து வருவதாகத் தோட்டச் சொந்தக்காரர்கள் கவலைதெரிவிக்கின்றனர். (36-கி)

### தாக்குதலில் ஒருவர் காயம்

நேற்று முன்தினம் மாலை மீசாலை பழைய புகையிரத நிலையச்சந்தியில் ஹெலிக்கப்டர் ஒன்று கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

இத் தாக்குதலில் கு. நவரத்தினம் (44) என்ற குடும்பஸ்தர் காயமடைந்தார். இவர் மீசாலையைச் சேர்ந்தவர்.

இவர் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப-32கி)

### உயர் கல்வி பெற லண்டன் சென்றார்

மன்னார் கச்சேரியில் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய கி. இராசநாயகம் லண்டனில் உள்ள மான்செஸ்ரர் பல்கலைக்கழகத்தில் திட்டமிடல் அபிவிருத்தி போன்ற துறைகளில் புலமைப்பரிசிலில் கல்வி பயில்வதற்காக லண்டன் சென்றுள்ளார். இதனை முன்னிட்டு இவர் பூநகரி ம. நோ. கூ. ச. தலைவர் பதவி பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் பதவி, மன்னார் பாற்சபை தலைவர் பதவி உட்பட ஏனைய பொது ஸ்தாபனங்களின் முக்கிய பதவிகளில் இருந்தும் இராஜினாமா செய்துள்ளார். இவர் சிறந்த சமூக சேவையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

### முறைசாரா மாணவருக்கு அவசர அழைப்பு

முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் முதலுதவிப் பயிற்சி பெற்ற எல்லா மாணவர்களும் தமது பிரதேசத்திற்கு அருகிலுள்ள அல்லது அவர்களது முறைசாராக் கல்விமுதலுதவிமையத்துக்குச் சென்று அவசரகாலப் பணிகளை உடன் மேற்கொள்ளுமாறு தொழில்நுட்பக் கல்வியதிகாரி ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (கி)

### சைக்கிள்கள் உங்களுடையவையா?

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் நடந்த பொம்மர் தாக்குதல்களின்போது கைவிடப்பட்ட இரு சைக்கிள்கள் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தினரால் கண்டுஎடுக்கப்பட்டு அக்காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (74 கி)

### பொருட்கள் திருட்டு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பல பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கல்லூரியின் முறைசாராப் பிரிவின் இயந்திரங்கள் மற்றும் கருவிகளே திருடப்பட்டுள்ளன. (70 கி)


"மரம் பல வளர்த்து
மழை வளம் பெருக்குவோம்"

கால் நடைகளுக்குச் சிறந்த
பசுமைத் தீவனம் இப்பில் இப்பில்.

ரூபா. 2. 00 அஞ்சல் முத்திரை அனுப்பி இப்பில் இப்பில் விதைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற் — யாழ்ப்பாணம்.

10095


## சிறுவிளம்பரம்


சேவை

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளையும் அடையாளஅட்டைகளையும் கவரிட்டு உடனடியாகப் பெற்றுக்கொள்ள கிளீன் கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுன் றோட், யாழ்ப்பாணம், (இந்துமகளிர் கல்லூரிச் சந்திக்கு அருகாமையில்) வேலைநேரம்: காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை. 10083

சேவை

நல்லூரில் தரமான. தெளிவான போட்டோஸ்ரட்பிரதிகளை அதிவிரைவாகப் பெறவும் (காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை), பாஸ்போட், அடையாள அட்டை, புகைப்படங்கள் (கறுப்பு. வெள்ளைப்படங்கள் மட்டும்)பிடிக்கவும், படங்களை 12'' × 10'' அளவுக்கு பெரிதாக்கவும் (மாலை 2.00 மணி தொடக்கம் 5. 00 மணி வரை) நாட வேண்டிய ஸ்தாபனம் சித்ராலயா, இல.351, கோவில் வீதி, (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குஅண்மையில்) நல்லூர். 10065

தவறிவிட்டது

பின்வரும் இலக்கங்களுள்ள இலங்கைவங்கிக் காசோலைகள் 15.10.90 அன்று திருநெல்வேலியில் பொம்மர் தாக்குதலின் போது தவறிவிட்டன.
(i) இல. 741136 ரூ.2528/-
(ii)இல. 740780 ரூ 1000/-
(iii)இல.830295 ரூ.2543/-
(iv)இல. 830664 ரூ.2543/-
கண்டெடுத்தோர் தயவு செய்து முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 10097

# மன்னார் செய்திகள்

## பத்திரிகை இல்லை

மன்னார் நகரப்பகுதிக்கு கடந்த சில மாதங்களாகப் பத்திரிகைகள் எதுவும் வருவதில்லை. இதனால் மக்கள் வெளிமாவட்டச் செய்திகளை அறிய முடியாமல் உள்ளனர். வானொலிச் செய்திகளைக் கேட்பதற்குப் பற்றிகளின் விலையும் அதிகமாக உள்ளது.

கடந்த சில தினங்களாக யாழ். மாவட்ட அரச ஊழியர்களின் வருகையால் பத்திரிகைகள் வருகின்றன. இவற்றை மக்கள் முண்டியடித்துப் பார்க்கிறார்கள். கடந்த மாதப் பழைய பத்திரிகைகளை இப்பகுதி மக்கள் வாசிப்பதற்கும் ஆர்வமாக உள்ளனர். மன்னார் பொதுசன நூலகமும் இயங்கவில்லை.

## கேதீஸ்வரம் பூட்டு

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயம் பூசைகள் எதுவுமின்றிப் பூட்டிக்கிடக்கிறது. இப்பகுதி மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியாகவும் உள்ளது. தற்போது ஓரிரு கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

ஆலய மடங்களின் கதவுகள் உடைக்கப்பட்டு உள்ளன. இப்பகுதி மக்கள் அச்சம் காரணமாக கட்டாடி வயல், பாப்பா மோட்டை போன்ற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள்.

## சந்தை இடம் மாறியது

மன்னார் நகரில் இயங்கி வந்த சந்தை ஆஸ்பத்திரியடிச் சந்திக்கு இடம் மாறியுள்ளது. சிறிய, பெரிய விற்பனைக் கடைகள் இங்கு காணப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்கள் எல்லாவற்றையும் இங்கு பெற்றுக் கொள்ள முடிகிறது. இதனால் இப்பகுதி கலகலப்பாகக் காணப்படுகிறது.

## பண்டார வெளியில்..

மன்னார் சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தற்போதைய சூழ்நிலை காரணமாகப் பண்டார வெளியில் இயங்குகிறது. பதில் உதவி அரசாங்க அதிபராக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இடம் மாறும்

மன்னார் உதவிக் கூட்டுறவு ஆணையாளர் அலுவலகம் விரைவில் இடம் மாற்றப்படவுள்ளது. அடம்பன் பகுதியில் உள்ள ஆட்காட்டி வெளிக்கு இடம்மாறும். தற்போது இந்த அலுவலகம் மன்னார்த் தீவில் சென். செபஸ்ரியார் ஆலயத்திற்கு அண்மையில் உள்ளது.

ஐந்து ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் பாலத்திற்கு வெளியே உள்ளன. ஒன்று மட்டும் மன்னார்த் தீவில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. போக்குவரத்து வசதி கருதியும், பொதுமக்களின் உணவு விநியோக நலன் கருதியும் இந்த இடமாற்றம் நடைபெறுவதாக மேலும் தெரியவந்துள்ளது.

## நடமாட்டம் இல்லை

மன்னார் மாந்தைச் சந்தியில் இருந்த கடைக்கட்டிடங்கள், வீடுகள் அனைத்தும் தரைமட்டமாகிய நிலையில் காணப்படுகிறது. வெறும் கற்குவியல்களே காணப்படுகின்றன. ஆவணி மாதம் 7-ம் 8-ம் திகதிகளில் இந்த அசம்பாவிதங்கள் நடைபெற்றன.

இச்சந்திப் பகுதியும் தற்போது மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியாகக் காணப்படுகிறது.

## 275 ரூபா தேவை

தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் செல்வதற்குத்தனிநபருக்கு275ரூபாசெலவாகிறது. யாழ். நகரிலிருந்து கேரதீவிற்கு வான் செலவாக 70 ரூபாவும், படகிற்கு 5ரூபாவும் செலவாகிறது. சங்குப்பிட்டியில் இருந்து விடத்தல் தீவிற்குச் செல்வதற்கு 100 ரூபாவும் விடத்தல் தீவிலிருந்து எருக்கலம்பிட்டி செல்வதற்கு படகுச் செலவாக 100 ரூபாவும் தேவைப்படுகிறது.

## வீதிச் சீர்கேடு

மன்னார் —சங்குப்பிட்டி வீதியில் தற்போது சைக்கிள் வியாபாரிகள், அரச ஊழியர்கள் பயணம் செய்வது அதிகமாகி உள்ளது. டீசல், அரிசி மண்ணெண்ணை வியாபாரிகளும், மன்னார் மற்றும் இடைப்பட்ட அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களும் இவ்வீதியால் பயணம் செய்கிறார்கள்.

ஆனால் வீதி சில இடங்களில் மோசமாகப் பழுதடைந்து காணப்படுகிறது. பல்லவராயன்கட்டுக்கும், நாச்சிக்குடாவிற்கும் இடையில் சைக்கிளில் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. சில இடங்களில் வீதியின் ஓரங்களில் ஒட்டு மண் பரவாமல் காணப்படுகிறது. இன்னும் சில இடங்களில் தார் ஊற்றிய வீதியும் பலமற்றுக் காணப்படுகிறது.

## சேவை தேவை

சங்குப்பிட்டியில் இருந்து தற்போது விடத்தல்தீவுவரை நடைபெறும் போக்குவரத்துச் சேவையை திருக்கேதீஸ்வரம் வரை விஸ்தரிக்குமாறு பயணிகள் கோரியுள்ளனர்.

## இடம் மாறியது

பேசாலையில் தற்காலிகமாக இயங்கி வந்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் இம்மாதம் பதினைந்தாம் திகதி முதல் பழைய இடத்திற்கு வந்துள்ளது. எனினும் ஊழியர் வரவு குறைவாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## விலைவாசி

மன்னார் நகரப் பகுதியில் உணவுப் பொருட்களின் விலை சற்று அதிகமாக உள்ளது. அரிசியின் விலை ஒரு கிலோ இருபது ரூபாவாக உள்ளது. மா ஒருகிலோ 25 ரூபாவாகவும், ஒரு கிலோ சீனி 35 ரூபாவாகவும் தற்பொழுது விற்பனை செய்யப்படுகிறது.

மண்ணெண்ணை தற்போது லீற்றர் 30 ரூபாவாக உள்ளது. ரோச் பற்றியை சோடி 60 ரூபாவுக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால், மன்னாரில் உள்ள வெளிமாவட்ட அரச ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள், மதிய உணவுப் பார்சல் ஒன்று 20 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## விடத்தல்தீவில்..

மன்னார் மாந்தை மேற்கு (அடம்பன்) உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தற்காலிகமாக விடத்தல்தீவில் உள்ள கமநலச்சேவை நிலையக்கட்டிடத்தில் இயங்குகிறது.

## வாகன ஓட்டமில்லை

மன்னார் நகரில் இருந்து பிற இடங்களுக்கு வாகன ஓட்டம் குறைவாகவே உள்ளது. எனினும் பேசாலை, எருக்கலம்பிட்டி பகுதிகளுக்கு வான்சேவை உள்ளது. பேசாலைக்கு 20 ரூபாவும், எருக்கலம்பிட்டிக்குப் 10 ரூபாவும் அறவிடப்படுகிறது. (17-8)

---

மண்டல் கொமிஷன்: (நேற்றைய தொடர்ச்சி)

# அடிப்படைச் சமூக ஜனநாயகத்துக்கான உளப்பூர்வமான அரச முயற்சியா? அல்லது அதிகாரச் சதுரங்கத்தின் 'வெட்டு' விளையாட்டுக்களில் ஒன்றா?

## உற்பத்திலாபத்திலும்புறக்கணிப்பு

அறுபதுகளிலும் பின்னரும் மேற்கொள்ளப்பட்ட பசுமைப் புரட்சி, பின்தங்கிய சாதியினரும் மற்றையோரும் எவ்வாறு உற்பத்தி லாபங்களிலிருந்து ஒதுக்கப்படுகின்றனர் என்பது தெரிய வந்தது. அத்துடன் விவசாயக் கூலிகள் பற்றிய பிரச்சினையிலும் இந்தப் பின்தங்கிய சாதி விவகாரம் முன்னுக்கு நின்றது.

## மண்டல் கொமிஷன்

இத்தகைய சூழ்நிலையிலேதான் மண்டல் என்பார் தலைமையில் ஒரு ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. (1977இல் அல்லது 1978இல்) அது 1980இல் தனது அறிக்கையையும் சிபார்சுகளையும் சமர்ப்பித்தது. அச்சிபார்சுகளில் ஒன்று மத்திய அரசு மட்டத்து உத்தியோகங்கள் 27% பின் தள்ளப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பதாகும். மண்டல் கொமிஷன் அறிக்கை இந்த 27விழுக்காடு ஒதுக்கீட்டைப்பற்றி மாத்திரமல்லாது நில உரிமைகள் போன்ற அடித்தளப் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியும் பல சிபார்சுகளைச் செய்திருந்தது. 1981 — 1982இல் அந்தச் சிபாரிசுகள் இந்தியப் பத்திரிகைகளிலே பெரிதும் விவாதிக்கப்பட்டன.

1980இல் செய்யப்பட்ட சிபாரிசுகளைத் தான் வி. பி. சிங் 1990இல் நடைமுறைப் படுத்த முயற்சி எடுத்தார்.

## தமிழ் நாட்டின் நிலைப்பாடு

பத்து வருடங்களின் பின்னர் இந்த ஆணைக்குழுச் சிபாரிசுகளுக்கு மீளச் செல்ல வேண்டிய அரசியல் நிர்ப்பந்தங்களைப்பற்றி அறிவதற்கு முன்னர், இப்பிரச்சினை தமிழ் நாட்டில் ஏன் ஒரு முக்கியமான பிரச்சினையாக மேற்கிளம்பவில்லை என்பதற்கும் உண்மையில் கலைஞர் கருணாநிதி மிகுந்த துணிச்சலுடன் திரு. வி. பி. சிங்கிற்கு ஆதரவு தருவதற்குமான காரணத்தை மிகச் சுருக்கமாகப் பதிவு செய்து கொள்ளுதல் தமிழ் மக்களாகிய எமக்கு அவசியமாகின்றது.

## திராவிட இயக்கமும் ஜஸ்டிஸ் கட்சியும்

பிராமண எதிர்ப்பியக்கமும் காங்கிரஸ் எதிர்ப்பியக்கமும் ஆரம்பத்திலிருந்தே முக்கியத்துவம் பெற்றிருந்த மாநிலம் ஒன்றிணைந்த சென்னை மாநிலமாகும். இந்த இரு நிலைப்பாடுகளின் சின்னமாக அமைந்தவை திராவிட இயக்க வளர்ச்சியும் ஜஸ்டிஸ் கட்சியின் தோற்றமுமாகும். ஜஸ்டிஸ் கட்சி சென்னை மாநிலத்தில் அரசாங்கம் அமைத்தபொழுது (1926 - இல்) அம் மாநிலத்தில் உத்தியோக ஒதுக்கீட்டைச் சட்டமாக்கிற்று. ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் பின்தங்கிய சாதியினர் முன்னிலை எய்தினர் என்று கூற முடியாது.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சியின் பின்னர் அது ஈ. வே. ராவின் தலைமையின் கீழ் வந்து திராவிடர் கழகத்துடன் இணைந்து கிடந்த பொழுது, பெரியார் ஈ. வே ரா. வின் சமூக நோக்குக் காரணமாக திராவிடக் கழக ஆதரவு வட்டம் பின்தங்கிய சாதியினர் பலரை உள்ளடக்கிற்று.

## தி. மு. க. வும் காமராஜரும்

1949 - இல் திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாத்துரையினால் தொடக்கப் பெற்ற பொழுது இந்த வட்டம் மேலும் விரிந்தது.

அவ்வேளை காங்கிரஸ் மட்டத்திலும் ஒரு முக்கிய மாற்றம் ஏற்பட்டது. சென்னைக் 'காங்கிரஸ்' இல் பிராமண ''ஆதிக்கம்'' குறைந்து, காமராஜர் மேற்கிளம்பினார். பின் தங்கிய சாதியினருக்காக வாதாடிய தி.மு கவின் செல்வாக்கைப் பின்தங்கிய சாதி ஒன்றினைச் சேர்ந்த கே. காமராஜ் நாடார் எதிர்த்தார். இந்த எதிர்ப்பு வழியாகத் தமிழ் நாட்டில் கல்வி அடி நில மட்டத்துக்குப் பரவியது. இந்தக் காலத்தில் கல்வி அமைச்சராக இருந்தவர் சி. சுப்பிரமணியமாகும்.

## இட ஒதுக்கீடும் இரு தி.மு.க. களும்

பின்னர் 1967 முதல் தி. மு. க. கட்சியின் கீழ் இட ஒதுக்கீடு மிகுந்த பயபக்தியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. எம். ஜி ஆர். இன் அ. தி. மு. க. கட்சிக்கு வந்த பின்னர் பின்தங்கிய சாதியினரின் தொகை அதிகரித்தது எனலாம். கீழ்க்காணும் பின் தங்கிய சாதியினர் பற்றிய விபரம் சுவாரசியமானதாகும்.

1977 இல் 121 சாதியினரும் அவரின் உட்பிரிவினரும் உத்தியோக ஒதுக்கீடுகளுக்காக பின்தங்கிய சாதியினராகக் கருதப்பட்டனர்.

1980 இலோ 143 சாதியினரும் உட்பிரிவினரும் இடம் பெற்றனர். முன்னர் முன்னிலையில் இருந்த சில சாதியினர் பின்னர் பின்தங்கியோராகக் கருதப்பட்டனர்.

திராவிட இயக்கத்தின் அச்சாணியான அமிசம் பின்தங்கிய சமூகத்தினருக்கு இட ஒதுக்கீட்டுக்காகப் போராடியமையே என்று வீரமணி கூறுவர்.

## வெளிநாடு செல்லும் பிராமணர்கள்

உண்மையில் தமிழ்நாட்டில் இது சம்பந்தமான இன்னொரு பிரச்சினை உருவாகியுள்ளது. இட ஒதுக்கீட்டின் உயர் விழுக்காட்டு அளவு காரணமாக சாமர்த்தியமுள்ள 'முன்னணிச் சமூகத்தினர்' பலர் உத்தியோகங்கள் பெறாத ஒரு நிலை ஏற்பட்டது இதனால் தமிழ் நாட்டின் படித்த பிராமண வாலிபர்கள் தமிழ் நாட்டுக்கு வெளியேயும் இந்தியாவுக்கு வெளியேயும் உத்தியோகம் தேடும் ஒரு போக்கு ஆரம்பமாகிற்று. இதனால் இன்று பிள்ளைமார் பிராமணக் குடும்பங்களைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் பலரை இந்தியாவிலும் பார்க்க அமெரிக்காவிலேயே அதிகம் காணக் கூடியதாக இருக்கின்றது. அமெரிக்க நகரங்களில் காணப்படும் 'தென்னாட்டுக் கோயில்கள்' இதனைச்சுட்டி நிற்கின்றன. இந்தச் செல்நெறியின் இலக்கிய வெளிப்பாடு தான் ''வாஷிங்டனில் திருமணம்' எனும் ஹாஸ்ய நாவல்.

## தமிழ் நாட்டில் எதிர்ப்பியக்கம் வளர வாய்ப்பில்லை

அரசாங்க உத்தியோகங்களிலும் சரி, வைத்தியம், சட்டம், தொழிற்றுறைகளிலும் சரி தமிழ் நாட்டில் பிராமணர் அல்லாதோர் பலர் முன்னணியில் நிற்கின்றனர். அவர்களிற் பலர் இந்த நிர்வாக நடைமுறைகளால் முன்னுக்கு வந்தவர்களாவர்.

எனவே தமிழகத்தில் ஒதுக்கீட்டுக்கான எதிர்ப்பியக்கம் வலுவான இடத்தைப் பிடிக்கவே முடியாது.

ஆனால் ஒரு முக்கியமான உண்மையை மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

எமது அரசியல் விமர்சகர்

**க. மா. இராசையா**

தமிழ் நாட்டில் உத்தியோக ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்ட முறையில் இந்த ஒதுக்கீட்டு முறைமையின் முக்கியமான பலவீனம் ஒன்று வெளிவந்துள்ளது.

## குடும்ப வருமான மட்டம் வரையுறை செய்யப்பட வேண்டும்

இந்த உத்தியோக ஒதுக்கீடுகள் சாதியடிப்படையிலே செய்யப்படுகின்றனவே தவிர குறிப்பிட்ட குடும்பத்தின் பொருளாதார அடிப்படையில்ல. உதாரணமாக நாடார், வன்னிய குல சத்திரியர் (வன்னியர், கௌண்டர், படையாச்சி போன்ற சாதியினர்) கொங்கு வேளாளர் ஆகிய சாதியினர் பின்தங்கிய சாதியினராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளனர். (1980)

ஆனால், இந்தச் சாதியினர் பலர் நிலச் சுவாந்தர்களாகவும் கைத்தொழிற் பிரமுகர்களாகவும், உத்தியோகத்தர்களாகவும் உள்ளனர். இத்தகைய ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனுக்கு. ஏழைப் பிராமணக் குடும்பத்தின் இளைஞனிலும் பார்க்க உத்தியோக வாய்ப்பு அதிகம் உண்டு

இதனை வாசிக்கும் பொழுது இலங்கையில் தமிழ் மாணவருக்கெதிராகச் செய்யப்படும் தரப்படுத்தல் முறைமை நினைவுக்கு வரலாம்.

இத்தகைய ஒரு நிலை நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டியதாகும். பின் தங்கிய சாதியினர் என்ற அளவில் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் பொழுது அவர்களின் குடும்பத்தினது வருமானமட்டம் வரையறை செய்யப்பட வேண்டுவது அவசியமாகும். தமிழ் நாட்டிலும் ஏழைப் பிராமணர்களுக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற ஒரு குரல் இப்பொழுது படிப்படியாக மேற்கிளம்புவதை நாம் அவதானிக்கலாம். அந்தக் குரலுக்கு தி. மு. கவினுக்குள் இருந்ததிலும் பார்க்க அ. தி. மு கவினுள் முக்கிய இடத்தைப் பெற்றது. (அ. தி. மு. க. தலைவி பிராமணப் பெண் என்பர்).

திரு வி. பி. சிங்கின் ஆலோசனைக்கெதிரான போராட்டத்தில் வருமான வரையறை ஒரு முக்கிய கோஷமாக முன்வைக்கப்பட்டிருப்பதை அவதானித்துக் கொள்ளல் வேண்டும்.

(வளரும்)

# மின்மாற்றிகளுக்கான ஒயில் கொழும்பிலிருந்து வராது

யாழ் மாவட்டத்திலுள்ள மின்மாற்றிகளுக்குக் கொழும்பிலிருந்து ஒயில் அனுப்பிவைக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் கொழும்புடன் தொடர்பு கொண்ட போது, யாழ் மாவட்டத்தில் நீர் மின்சாரம் வழங்கப்படுவதால் அதற்கு ஒயில் தேவையில்லை என இலங்கை மின்சாரசபையினால் தெரிவிக்கப்பட்டதாக அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் அரச அதிபருக்குத்தெரிவிக்கப்பட்டதாம்.

இது தொடர்பாக மீண்டும் இலங்கை மின்சார சபையுடன் அரச அதிபர் தொடர்பு கொள்ளவிருக்கிறார்.

மின்மாற்றிகளுக்கு ஒயில் கிடைக்கும்வரை, ஒயில் திருடப்பட்ட மின்மாற்றி பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க முடியாதிருப்பதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66-ரூ)

குவைத்தில்

## இலங்கைத் தூதரகத்தில் தமிழருக்குப் பாரபட்சம்

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் அங்குள்ள சிங்களவர்களுக்குச் சார்பாக நடந்து கொள்வதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இத் தூதுவராலயத்தில் உள்ள சகல அறிவித்தல்களும் சிங்கள மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. இங்குள்ள அதிகாரிகளும் சிங்களத்தில் உரையாடுபவர்களுக்கே சலுகை செய்கின்றனராம்.

குவைத்தில் உள்ள சிங்களவர்களிடம் 1000 ரூபா வை (9 குவைத் டினாரை) பெற்றுக்கொண்டு இலங்கைத் தூதுவராலயம் அவர்களுக்கு சர்வதேச கடவுச்சீட்டை வழங்கி வருகிறது. ஆனால் இந்தச்சலுகை அங்குள்ள தமிழர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. (ப.30-கி)

## மன்னாரில் வங்கிகளில் பணக் கொடுப்பனவுகள்

மன்னார் மாவட்டத்திலுள்ள சனிவிலேச் என்ற இடத்தில் இலங்கை வங்கி, மக்கள்வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி ஆகியன செயற்படுவதுடன் அங்கு பணக் கொடுப்பனவுகளும் நடைபெறுகின்றன.

மன்னார் மாவட்ட ஒய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவுகள் மன்னார் செயலகத்தினால் பணமாக வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வங்கிகளின் செயற்பாட்டால் ஏனைய அரச ஊழியர்களின் சம்பளங்களும் வழங்கப்பட்டுவருகின்றன. (66ரூ)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி சங்கானைக்கு இடமாற்றம்

தற்போதைய விமானத் தாக்குதல்களை யடுத்து தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலை தற்காலிகமாகச் சங்கானை அரசினர் வைத்திய சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இவ்வைத்திய சாலையில் உள்ள நாற்பத்தேழு நோயாளிகளில் இருபத்தேழு நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் யாவரும் மனநோயாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-11-ரூ)

## பொறிவெடியில் காலிழப்பு

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிண்ணியடிப்பகுதியில் பொறிவெடியில் சிக்கி ஒரு ராணுவச் சிப்பாயும் பொலிஸார் ஒருவரும் தமது கால்களை இழந்துள்ளனர். (து)

**அச்சுவேலியிலும்...**

இருந்தது. இப்பகுதியில் துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது.

இதேபோல மற்றொன்று தென்மூலைச் சுடலையடியிலும் விழுந்து வெடிக்காத நிலையில் உள்ளது.

தென்மூலையில் திரு. மரியநாயகம் என்பவரது வீட்டில் ஒருகுண்டு விழுந்து வெடித்ததில் வீடுமுற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது. (32ப24-ரூ)

**வயாவிளானூடாக...**

முன்னேற முயன்று வருகின்றனர். இதனை எதிர்த்து புலிகள் தாக்குதல் நடாத்திக் கொண்டிருக்கின்றனர்.

இதேசமயம் இன்னோர் படைப்பிரிவு கட்டுவன் பகுதியூடாக குரும்பசிட்டி நோக்கி முன்னேற முயன்று பின்னர் அங்கிருந்து பின்வாங்கினர். (32ரூ)

**காரைநகரில்...**

யோகத்தால் வயலில் வேலை செய்த பொன்னுத்துரை ஈஸ்வரி (28) என்ற பெண் காலில் காயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். (ப-31-ரூ)

## சீனிமூடைகள் இராணுவ அரண்

அண்மையில் கோட்டையைப்பிடிப்பதற்காக மண்டைதீவு ஊடாக வந்து சிறுத்தீவில் முகாமிட்டிருந்த இலங்கை இராணுவத்தினர் தமது பாதுகாப்பு அரண்களுக்கு சீனிமூடைகளையும் பருப்பு மூடைகளையும் பாவித்து இருந்ததை நேற்று முன்தினம் இத்தீவில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் கண்டனர். (33 ரூ)

**ஹெலிகப்டர்...**

படி அவசர அவசரமாக பலாலியில் தரையிறங்கியது. பொதுமக்கள் இதனை அவதானித்தனர். (48ரூ)

**திருநெல்வேலி...**

பலாலி வீதியில் மடம் ஒழுங்கையில் உள்ள சட்டத்தரணி சின்னப்பா, கே. திருச்சிற்றம்பலம் சந்தைக்கு முன்பாக உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆர். ராஜரட்ணம் ஆகியோரின் வீடுகள் பலத்த சேதமடைந்தன. (74 33 66ரூ)

**உரும்பராயில்...**

மரணமான பெண் செல்லன் கனகாம்பிகை(22) என அடையாளம் காணப்பட்டுள்ளது. நா. சிவதீபன் (14), பொ. பத்மநாதன்(39), இ யசோதா (16), கா. சிவஞானம் (60), வே, கருணா (14), சுதர்சன் (17) ஆகியோர் படுகாயமடைந்தனர் (ப.11-ரூ-ஸ்ரீ)

## பூநகரிக்குப் புதிய உ. அ. அதிபர்

பூநகரி உதவி அரசாங்க அதிபராக திரு. வி. எஸ். கனகரட்ணம் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் பொறுப்பேற்கவிருக்கிறார்.

தற்போது கிளிநொச்சி செயலகக் காணிப்பிரிவு உதவி அரச அதிபராகப் பணியாற்றி வரும் இவர் முன்னர் யாழ் மாவட்ட நீதி மன்றப் பதிவாளராகவும், யாழ் செயலக மேலதிக அலுவலக நிர்வாகஸ்தராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (66 ரூ)

## வவுனியா இலங்கை வங்கி ஊழியருக்கு

இலங்கை வங்கி வவுனியா கிளையில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் இன்று வெள்ளிக்கிழமை தவறாது கடமைக்கு சமுகமளிக்கும்படி வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் பணித்துள்ளார். (கி)

## தபால், முத்திரை வரவில்லை

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வந்த குமண கப்பலில் வட பகுதிக்குரிய தபாற் பொதிகளும், முத்திரைகளும் வந்துசேரவில்லை.

இதேவேளை இக்கப்பலில் தபாற் பொதிகள் வந்து சேருமென யாழ் தபாற் திணைக்கள அதிகாரிகள் எதிர்பார்த்து தபாற் பொதிகளை பருத்தித்துறையில் இருந்து கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (33 ரூ)

## இடமாற்றம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கிவந்த அகதி முகாம் கடந்த செவ்வாய் முதல் கைதடியில் உள்ள நவீல்ட் பாடசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இம் முகாமில் திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்தனர். (ப-32-கி)

**கீரிமலை**

ஏனைய பகுதிகள் பலத்த சேதமடைந்தன.

படுகாயமடைந்த க. கணேசமூர்த்தி (46) கந்தசாமி ஆசிரியர், சிவரஜனி (15) ஆகியோர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இதில் கணேசமூர்த்திக்கு இடது கை அகற்றப்பட்டது. (48 ப11 ரூ)

**முகாமின்...**

நடவடிக்கை எடுப்பதற்கு முகாமின் சுற்றாடலில் விடுதலைப்புலிகள் நிலைகொண்டு விமானஒடுதளத்தை தாக்குகின்றனர். இதனால் முகாமின் பரப்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதே காரணம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார், (து)

சங்கானை கூ. ச. கிளை 15 இல்

## இலவச நிவாரணத்தில் பனாட்டும் விநியோகம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை இல. 15 இல் தற்போது வழங்கப்படும் இலவச நிவாரணப் பங்கீட்டுப் பொருட்களில் பனாட்டும் கட்டாயப்படுத்தி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. 'சினோவைற் சோப்' என பற்றுச்சீட்டில் எழுதப்பட்டே இது நான்கு ரூபாவுக்குக் கொடுக்கப்படுகிறது. கப்பலில் வரும் இலவச உணவுப் பொருட்களுக்கு இங்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலேயே பனாட்டு வழங்கவேண்டியுள்ளதாக கிளை முகாமையாளர் பொதுமக்களுக்குத் தெரிவிக்கிறார். (ப.1-ரூ)

## ஏழு போராளிகள் வீரமரணம்

நேற்று பலாலியில் நடைபெற்ற மோதலில் புலிகள் தரப்பில் ஏழு போராளிகள் வீரமரணமடைந்தனர். ராபீக் (பருத்தித்துறை), ஷெல்டன் (நாவாந்துறை), விக்ரர் (புத்தளம்), ஐயான் (புத்தூர்), ரசாத் (மூளாய்) மரியதாஸ், ரஹீம் ஆகியோரே வீரமரணமடைந்த போராளிகளாவர். (து)

## நச்சுப்புகைக் கவசங்கள் கோட்டையிலிருந்து மீட்பு

மிதிவெடியிலிருந்து தப்புவதற்காக ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பாவிக்கப்பட்ட சில சப்பாத்துகள் கோட்டைப் பகுதியிலிருந்து புலிகளால் அண்மையில் மீட்கப்பட்டன.

சுமார் அரை அடி உயரமுள்ள இச்சப்பாத்து றபரினால் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நச்சுப் புகையிலிருந்து தப்புவதற்குப் பயன்படுத்தப்படும் முகக்கவசங்கள் சிலவும் கோட்டையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (70 கி)

## சுன்னாகத்தில் ஒருவர் பலி

சுன்னாகத்தில் நடாத்தப்பட்ட விமானத் தாக்குதலில் பங்களா வீதியில் உள்ள திருமதி ச. வேதநாயகி என்பவரது வீட்டின் மீது விழுந்தது.

இதனால் வீடு சேதமானதோடு இவரது மகனான ச. விமலச்சந்திரன்(30 வயது) ஸ்தலத்திலே கொல்லப்பட்டார். ச. வேதநாயகிக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

கே. கே. எஸ். வீதியில் உள்ள நாதன் என்பவரது மரம் அரியும் தொழிற்சாலை மீதும் ஒரு குண்டு விழுந்து வெடித்ததால் இத்தொழிற்சாலை பலத்த சேதமடைந்தது.

இப் பகுதியிலே உள்ள பல வீடுகளும் சேதமடைந்தன. ஒரு சிறுமி உட்பட வேறு ஒரு பெண்மணியும் காயமடைந்தனர். காயமடைந்தோர் மானிப்பாய் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ப 10 ரூ

யாழ்ப்பாணம் செய்திகளுக்கு

## கொழும்புப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுக்கின்றன

யாழ் நிலைமை பற்றிய செய்திகளுக்கும், மக்கள் முன்னணி செயலதிபர் யோகியின் பேட்டிக்கும் கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள வார பத்திரிகை ஒன்று முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் யோகரட்ணம் யோகி தமது நிலைப்பாட்டை விளக்கி வழங்கிய பேட்டி 'லங்கதீப' என்ற இந்த சிங்களபத்திரிகையில் வெளியாகியுள்ளது.

இவ் வாரம் பத்திரிகை இரண்டு இலட்சம் பிரதிகள் விற்பனை கொண்டதாகும்.

இதேவேளை கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகையான சண்டேரைம்ஸ் யாழ் கோட்டையை விடுதலைப் புலிகள் கைப்பற்றியது தொடர்பான வர்ணப் படங்களை பிரசுரித்துள்ளது. (11கி)

## வவுனியாவில் வழமைபோல அலுவலகங்கள் ஆரம்பம்

வவுனியா பிரதம தபால் நிலையம் மீண்டும் முன்னைய கட்டிடத்தில் இயங்க ஆரம்பித்துவிட்டது.

வழமையான சகல கருமபீடங்களும் செயற்பட ஆரம்பித்துவிட்டதாகத் தபால் இலாகா அதிகாரிகள் கூறினார்கள்.

வவுனியா கச்சேரிக்குள் இயங்கிய தற்காலிக உப-தபால் நிலையம் மூடப்பட்டுவிட்டன.

அதேவேளை இம்மாவட்டத்தில் பெரும்பாலான அரச காரியாலயங்கள் செயற்படத் தொடங்கிவிட்டன.

95 வீதமான அதிகாரிகளும், அலுவலர்களும் வேலைக்குத் திரும்பிவிட்டதாக அதிகாரிகள் கூறினார்கள்.

ஹட்டன்நஷனல் வங்கி திறக்கப்பட்டு விட்டது.

ஏனைய வங்கிகளையும் திறக்க முயற்சிகள் இடம்பெறுவதாக இராணுவ வட்டாரங்கள் கூறின. (11கி)

**காயமடையும்...**

தாக இருப்பதாகவும் ஏஜென்சி செய்திகள் மேலும் தெரிவித்தன, (து)

## உறவினர் அவலம்

மண்கும்பான் அ. மி. த. க பாடசாலை, பாபா பள்ளிவாசல், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களில் வைத்துக்கைதுசெய்யப்பட்ட எழுபத்தியொருபேரின் நிலைமையெதுவென தெரியாமல் இவர்களது உறவினர்கள் தினமும் மானிப்பாய் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அலைந்து திரிகின்றனர்.

இவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டனர் எனவும் எஞ்சியோர் பலாலி இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டனர் எனவும் படையினர் கூறுகின்றனராம். (ப-11

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, லக்ஷ்மிபில்டிங்" இல் உள்ள அச்சகத்தில் 19-10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.